Fashion Parade for Handloom Fabrics

* 273 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR. Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Handloom Board held any Fashion Parade during the Handloom Week Celebration in April 1970; and

(*b*) if so, whether police licences were obtained for these parades?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவரவர்களே, போட்டியில் கலந்து கொள்வதற்கு எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஹாண்ட்லூம் போர்ட் செய்வதாக கேள்வி முன்னே இருந்ததால் இல்லை என்று சொன்னேன். ஆனால், ஆண்டு தோறும் கைத்தறி வாரம் என்று கொண்டாடப்படுகிறது. அப்படிக் கொண்டாடும்போது, அதில் இது போன்ற 'பேஷன் பேரேடு நடத்து கிறார்கள். அதிலே யார் யாரை தேர்ந்தெடுக்கலாம் என்பது அவர்களுக்குள்ள பொறுப்பு. அதை நம்முடைய தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கம் நடத்துகிறது.

திரு. கே. விநாயகம்: இது நம்மை எல்லாம் பாதிக்கும் பிரச்னை. கைத் தறி வாரம் கொண்டாடுவது அல்லது கைத்தறி துணியைப் பரப்புவதற்கு 'பேஷன் பேரேடு' வைத்து நடத்துவது எல்லாம், கைத்தறியில் ஈடுபட்டு இருக்கும் தாழ்வான, மோசமான வாழ்க்கை நடத்திக்கொண்டு இருப்பவர் களின் வாழ்க்கையை உயர்த்துவதற்குத்தான் என்று பொருள். ஆனால் ஆட்சியில் இல்லாதபோது கைத்தறித் துணிகளை தோள் மேல் போட்டு விற்று அந்த மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு என்ன பொதுவாக, ஏற்கெனவே காங்கிரஸ் செய்யாத காரியத்தை நீங்கள் ஏதாவது அந்த மக்களுக்கு, அவர்கள் வாழ்க்கை உயர்வதற்கு இது வரையில் செய்து இருக்கிறீர்கள் என்று குறிப்பு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு நெசவாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கத்தில் தான் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டதில் மகிழ்ச்சி. இப்போது அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடிய வகையில் நிவாரணம் தரக்கூடிய வகையில் முழு முயற்சி எடுத்து வருகிறோம். நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே ரிபேட் கொடுப்பதில் முன்னே கொடுத்ததைவிட 4--5 மடங்கு அதிகம் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறோம். சென்ற ஆண்டு ரூ. 85 லட்சம் ரிபேட் கொடுத்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, நான் எங்கே சென்றாலும், கைத்தறி நெசவு கூட்டுறவு சங்கத்திலே சரக்கு தேங்கிக் கிடக்கிறது என்று சொல்வார்கள், இந்த அரசாங்கம் பொறுப்பு எடுத்ததற்கு பின்னாலே எல்லாச் சங்கங்களும், "நாங்கள் உற்பத்தி செய்து தலைமைச் சங்கத்திற்கு அனுப்பக்கூடிய துணி களுக்கு உடனடியாக பணம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து இருக் கிறீர்கள்! நீங்கள் பல்லாண்டு வாழ்க" என்று எங்களை வாழ்த்துகிறார்கள். இன்னும் என்ன செய்யவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

நெசவாளர் பிரச்னையை ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கையாகும். நெசவாளர்கள் என்னென்ன துணிகளை நெய்யலாம், காலத்திற்கேற்றவாறு தரத்தை உயர்த்தலாம் என்று அறிவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சிப் பள்ளி நிலையத்தை நாம் ஏற்பாடு செய்து வேண்டிய ரகங்களை ஆங்காங்கு நெய்ய கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் பரமக்குடியில் சென்றால் அங்கே ஒரேமாதிரியான சேலையைத்தான் அந்தக் காலத்திலிருந்து நெய்கிறார்கள். அவர்களுக்கு டவல், நாப்கின் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும், பயிற்சி கொடுப்பதற்கும் மட்டும் ரூ. 4 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்து வெற்றி பெற்று இருக்கிறோம். நாங்கள் ஆரம்பித்த காரணத்தால் கனம் திரு. விநயகத்திற்கு கோபம் வந்தால் கோபம் வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

Dye chemicals for handloom Industry

* 274 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any plant for the manufacture of Dye Chemicals used in Handloom Industry is to be set up in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) &(இ) மத்திய அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கியுள்ளது. இப்பொருள் கைத்தறி தொழில்களில் பெரிதும் உபயோகிக்கப்படும் சாயங்கள் தயாரிக்க உதவும் முக்கிய மூலப் பொருளாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தத் தொழிற்சாலை எப்பொழுதிலிருந்து உற்பத்தி தொடங்க இருக்கிறது? அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு சாய ரசாயன பொருள்கள் இறக்குமதி சம்பந்தமாக ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே? அது உண்மையா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தொழிற்சாலை துவங்குவது பற்றி ஏதாவது தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும். முன்பே கேள்வி போட்டார்கள், பதில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், மீண்டும் அதைச் சந்திப்பதற்குத் தயார். இதைப் பொறுத்த அளவிற்கு நம்முடைய நாட்டிற்கு டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிக்குத் தேவையான, குறிப்பாக கைத்தறிக்குத் தேவையான தொழிற்சாலைகளுக்காக நம்முடைய அரசாங்கம் ரூ. ஒரு கோடி முதலில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதாக முடிவு செய்திருக்கிறது. அதற்கு லெட்டர் ஆஃப் இன்டென்டு, முன் அனுமதி நமக்கு